**செய்தி வெளியீடு எண்: 834** **நாள்: 25.11.2019**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்
தரமணி, சென்னை – 600 113

# அகராதியியல் நாள் நிறைவு விழா

# பன்னாட்டுக் கருத்தரங்கம்

## <u>அறிவிப்பு மடல்</u>

**நாள் : 2020 பிப்ரவரி 07**

தமிழ்ப் புலமையோரே!

2019–2020–ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டப்பேரவைக் கூட்டத்தில், தமிழ்வளர்ச்சித்துறை மானியக் கோரிக்கையின்போது, **மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் திரு. க. பாண்டியராசன்** அவர்கள் *‘தமிழ் அகராதியியலின் தந்தை’ என்று போற்றப்படும் வீரமாமுனிவரின் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் மூலம் ஆண்டுதோறும் நவம்பர் 8–ஆம் நாள் ‘தமிழ் அகராதியியல் நாளாகக்’ கொண்டாடப்படும் என்று அறிவித்தார்.*

2) மேற்காண் அகராதியியல் நாளை முன்னிட்டு இரண்டு நாள்கள் ‘பன்னாட்டுக் கருத்தரங்கம்’ நடத்தப்படும் என்று அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 08.11.2019–ஆம் நாள், சென்னை எத்திராசு மகளிர் கல்லூரியில் ‘தமிழ் அகராதியியல் நாள்’ தொடக்க விழாவும், முதல் நாள் பன்னாட்டுக் கருத்தரங்கமும் நடைபெற்றது. இந்நிலையில், ‘தமிழ் அகராதியியல் நாளின்’ நிறைவு விழாவும், 2–ஆம் நாள் பன்னாட்டுக் கருத்தரங்கமும் 07.02.2020–ஆம் நாள் நடைபெறவுள்ளது.

இதில் பங்கேற்க ஆர்வமுள்ள தமிழார்வலர்கள், தமிழறிஞர்கள், ஆய்வாளர்கள், பேராசிரியர்கள் உட்பட அனைவரும் **அகராதியியல், சொல்லாய்வியல், அகராதிகளும் மொழிக்காப்பும்** உள்ளிட்ட பொருண்மைகளில் 5 பக்க அளவில் ஆய்வுக் கட்டுரைகளை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பன்னாட்டுக் கருத்தரங்கத்திற்கு வழங்கப்படும் ஆய்வுக் கட்டுரைகளில் தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் ‘**தமிழ் அகராதியியல் நாள்**’ சிறப்பு ஆய்வு மலரில் இடம் பெறும்.

**<u>கட்டுரை தொடர்பான விவரங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| பக்க அளவு | : | A4 அளவில், கணியச்சில் 5 பக்கங்களுக்கு மிகாமல் |
| எழுத்துரு | : | ஒருங்குறி (யுனிகோட்) |
| எழுத்தளவு | : | 11 |
| வரி இடைவெளி | : | 1.5 |
| (Word File) அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி | : | dir.dtedp@tn.gov.in |
| கட்டுரையின் அச்சுப் படியை அனுப்ப வேண்டிய முகவரி | : | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், முதல் தளம்,<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை – 600 113.<br>☏ 044 – 2254 1209 |
| கட்டுரைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | : | 20.12.2019 |

**<u>குறிப்பு:</u>**

கட்டுரையாளர்கள் ஒரு பக்க அளவில் கடவுச்சீட்டு அளவிலான ஒளிப்படத்துடன் (Photo) கூடிய தன்விவரக் குறிப்பினையும் அனுப்பி வைக்க வேண்டும். மேலும், அனுப்பப்படும் ஆய்வுக் கட்டுரை இதற்கு முன் வேறு எந்த இதழ்களுக்கும் வழங்கப்பெறவில்லை என்ற உறுதிமொழியையும் தன்னொப்பமிட்டு (self attested) அனுப்ப வேண்டும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**